செ.வெ.எண்: 29-2020 நாள்:21.07.2020

**விழுப்புரம் மாவட்டம் திண்வடினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (21.07.2020) விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட சஞ்சீவிராயன்பேட்டை, ரோசன்பாட்டை, அம்பேத்நகர், கிடங்கல் 2-ம் பகுதி மற்றும் பஜார் வீதி ஆகிய பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் வைரஸ் நோய் தொற்று தொடர்ந்து பரவுவதை தடுக்க கடைவீதி பகுதிகளில் அன்றாட தேவைகளுக்கு பொருட்கள் வாங்க வரும் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கியவுடன் தாங்கள் வசிக்கும் வீட்டிற்கு உடனடியாக சென்று விட வேண்டும். அவ்வாறு செல்லாமல் பொதுஇடங்கள் மற்றும் கடைவீதிகளில் சுற்றித்திரிபவர்கள் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். மேலும், பொருட்கள் வாங்க வரும் பொதுமக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்து வருபவர்களுக்கு வியாபாரிகள் பொருட்கள் வழங்க வேண்டும் என்றும். அதிகப்படியான கூட்டத்தினை கூட்டிக்கொண்டு வியாபாரம் செய்யும் வியாபாரிகள் மற்றும் வணிகர்கள் மீது நகராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாகத்தின் மூலம் தடுப்பு கட்டைகள் ஏற்படுத்தி அப்பகுதியினை சேர்ந்தவர்கள் எவரும் வெளியே செல்லாதவாறும், வெளியாட்கள் எவரும் அப்பகுதிக்கு உள்ளே செல்லாதவாறும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு கட்டைகளை சேதப்படுத்தி பொதுமக்களுக்கு நோய் தொற்று பரவுவதற்கு காரணமாக இருந்து வருகின்றனர் இதுபோன்ற ஒழுங்கீன செயல்களில் ஈடுபடுவர்கள் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் காவல்துறையினர் உடனடியாக அவர்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது திண்டிவனம் சார் ஆட்சியர் டாக்டர்.எஸ்.அனு.இ.ஆ.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ந.தேவநாதன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்